செ.வெ.எண்: நாள்: 10.01.2022

## விருதுநகர்மாவட்டம்

**வெடி விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.36 இலட்சத்திற்கான காசோலைகளையும்,**

**மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்களில் 10 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் வழங்கினார்கள்.**

---

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இன்று (10.01.2022) பட்டாசுதொழிற்சாலைகளில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த 12 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவித்தொகைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் ஆகியோர்கள் ரூ.36 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்கள்.

அதன்படி, வெம்பக்கோட்டை வட்டம், சிப்பிப்பாறை கிராமத்தில் 20.03.2020 அன்று மெ/ஸ்.இராஜம்மாள் பயர் ஒர்க்ஸ்-ல் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம் தெற்குவெங்கநல்லூர் கிராமத்தை சேர்ந்த திரு.மாடசாமி அவர்களின் வாரிசுதாரரான திருமதி.சந்தன முனீஸ்வரி (மனைவி) மற்றும் திருமதி.கணபதி (தாயார்) என்பவருக்கும், சாத்தூர் வட்டம் கண்மாய் சூரங்குடி கிராமத்தை சேர்ந்த திருமதி.காளியம்மாள் அவர்களின் வாரிசுதாரரான திரு.ரெங்கசாமி என்பவருக்கும்,

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் முக்கூட்டுமலை கிராமத்தை சேர்ந்தவர்களான திருமதி.பொன்னுத்தாய் அவர்களின் வாரிசுதாரரான செல்வி.மோகனசெல்வி என்பவருக்கும், திரு.குருசாமி அவர்களின் வாரிசுதாரரான திருமதி.ஆறுமுகத்தாய் என்பவருக்கும், திருமதி.முருகலட்சுமி அவர்களின் வாரிசுதாரரான திரு.சிங்கராஜ் என்பவருக்கும், புளியங்குளம் கிராமத்தை சேர்ந்த திருமதி.வேலுத்தாய் அவர்களின் வாரிசுதாரரான திரு.செல்வக்குமார் என்பவருக்கும், முக்கூட்டுமலை கிராமத்தை சேர்ந்த திருமதி.பேச்சியம்மாள் அவர்களின் வாரிசுதாரரான செல்வி.கிருஷ்ணவேணி (மகள்), செல்வன்.சரவணக்குமார் (மகன்) மற்றும் திரு.ராமர் (கணவர்), என்பவர்களுக்கும்,

தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம் மைப்பாறை கிராமத்தை சேர்ந்தவர்களான திருமதி.தங்கமலை காளியம்மாள் அவர்களின் வாரிசுதாரரான திரு.முப்புடாதி என்பவருக்கும், திருமதி. தாமரைச்செல்வி அவர்களின் வாரிசுதாரரான திரு.கணேசன் என்பவருக்கும், திருமதி.ஜெயபாரதி அவர்களின் வாரிசுதாரரான திரு.ஜெயகுமார் என்பவருக்கும், சங்குப்பட்டி கிராமத்தை சேர்ந்த திரு.முருகையா அவர்களின் வாரிசுதாரரான திருமதி.செல்லத்தாய் என்பவருக்கும், சத்திரப்பட்டி

கிராமத்தை சேர்ந்த திரு.பாலசுப்பிரமணியன் அவர்களின் வாரிசுதாரரான திருமதி.விஜயா என்பவருக்கும் என மொத்தம் 12 நபர்களுக்கு தலா ரூ.3,00,000/- வீதம் மொத்தம் ரூ.36,00,000/-த்திற்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிந்து நிவாரண நிதி உதவியினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் ஆகியோர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளி நல அலுவலகம் மூலமாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்ப்பு நாளில் பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து, வத்ராயிருப்பு வட்டம் கோட்டையூர் கிராமத்தை சேர்ந்த திருமதி.வாசியம்மாள் மற்றும் திரு.முனீஸ்வரன், திருச்சுழி வட்டம் பூமாலைப்பட்டி கிராமத்தை சேர்ந்த திரு.ராமன், இராஜபாளையம் வட்டத்தை சேர்ந்த திரு.குருபூபதி, சிவகாசி வட்டம் அனுப்பன்குளத்தை சேர்ந்த திரு.சென்ராமன் மற்றும் விஸ்வநத்தம் கிராமத்தை சேர்ந்த திரு.ஆறுமுகம், அருப்புக்கோட்டை வட்டம் கட்டங்குடி கிராமத்தை சேர்ந்த திரு.பாலாஜி மற்றும் முத்துராமலிங்கபுரம் கிராமத்தை சேர்ந்த மஞ்சு பார்கவி, திருமதி.கௌசல்யா மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டம் அக்கரைப்பட்டி கிராமத்தை சேர்ந்த திரு.மதுராசு என 10 மாற்றுதிறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மங்களராமசுப்பிரமணியன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.கிருஷ்ணவேணி உட்பட வட்டாட்சியர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**